## குறைந்த செலவில் நல்ல வருமானம் பெற ஏற்ற தைல மரம்



பெயர் - பழனிவேல்

கிராமம் - சமுத்திரப்பட்டி

தாலுகா – கந்தர்வக்கோட்டை

மாவட்டம்

புதுக்கோட்டை

நான் பல வருடமாக தைல மரத்தை சாகுபடி செஞ்சுட்டு வரேன். தைல மரத்தோட இதர பயிர்களும் சாகுபடி செய்றேன். இதர பயிர்கள் சாகுபடி செய்றதால, தைல மரமும் நல்லா வளருது. எனக்கு இதர பயிர்கள் மூலமாகவும் நல்ல வருமானம் கிடைக்குது. சாகுபடி சரியா செஞ்சா அறுவடைக்கு பிறகு வேறு பயிர்கள் தாராளமாக பயிர் செய்யலாம். தைல மரம் தண்ணீர் உறிஞ்சும்னு எல்லாம் சொல்றாங்க. ஆனால் அப்படிலாம் நடக்கல. குறைந்த செலவுல நல்ல வருமானம் தரக்கூடிய மரப்பயிர்னா அது தைல மரம் தான். நான் ஏக்கருக்கு 40 முதல் 50 மெ.டன் எதிர்ப்பார்க்குறேன்.